©
தமிழ்நாடு அரசு
2020

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : 1.60 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 5]

சென்னை, புதன்கிழமை, ஜனவரி 29, 2020
தை 15, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2051

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**தொழில் துறை**

**அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண் 206, தொழில் (எம்எம்சி.1)த் துறை, 22 நவம்பர் 2019.]*

1957 ஆம் ஆண்டு சுரங்கம் மற்றும் கனிமப்பொருட்கள் (மேம்பாடு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 67/1957) 15 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) மற்றும் (1–A) உட்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு சுரங்கம் மற்றும் கனிமப்பொருட்கள் சலுகை விதிகளில் பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

**திருத்தங்கள்**

மேற்சொன்ன விதிகளில், 8–A ஆம் விதியில்–

(1) **துணை விதி (2) இல்,–**

(a) பகுதி (a) இல்,–

(i) உட்பகுதி (ii) க்குப் பதிலாகப் பின்வரும் உட்பகுதி அமைத்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:–

"கனிமங்களை வெட்டி எடுப்பதற்கான குத்தகை தனிநபர்களுக்கு அல்லது நிறுவனத்திற்கு அல்லது கூட்டு நிறுவனத்திற்கு அளிக்கப்பட வேண்டும்.";

(ii) உட்பகுதி (iii) விட்டுவிடப்பட வேண்டும்;

(b) பகுதி (b) விட்டுவிடப்பட வேண்டும்;

(c) உட்பகுதி (c) க்குப் பதிலாகப் பின்வரும் பகுதி அமைத்துக்கொள்ளப்பட வேண்டும், அதாவது:–

"(c) அனுமதிக்கப்படும் குறைந்தளவு பரப்பளவானது, ஒரு எக்டேருக்குக் குறையாமலும் அதிக அளவு ஐம்பது எக்டேருக்கு மிகாமலும் இருக்க வேண்டும்.";

(2) **துணை விதி (4) இல்,** பகுதி (b) இல், உட்பகுதி (ii) க்குப் பதிலாகப் பின்வரும் உட்பகுதி அமைத்துக்கொள்ளப்பட வேண்டும், அதாவது:–

"(ii) பொறுப்புறுதிவைப்புத் தொகை வகையில் ரூ.25,00,000/– (ரூபாய் இருபத்தைந்து இலட்சம்) தொகைக்கான கேட்பு வரைவோலை;";

(3) **துணைவிதி (6) இல்,—**

(a) பகுதி (a) இல், உட்பகுதி (i) இல், ''ரூ.1,00,000'' என்னும் பதிவுக்குப் பதிலாக ''ரூ.25,00,000'' என்னும் பதிவு அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்;

(b) பகுதி (b) இல், உட்பகுதி (iii) க்குப் பதிலாகப் பின்வரும் உட்பகுதி அமைத்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:—

"(iii) ஒப்பந்தப்புள்ளி— ஏலத்திற்கான விண்ணப்பங்களின் மொத்த எண்ணிக்கை மூன்றுக்கும் குறைவாகப் பெறப்படும் நேர்வில், ஏல நடைமுறை ரத்து செய்யப்பட்டு, ஒரு மாதத்திற்குள் ஒரு முறை மறுஏலத்திற்குப் பரிந்துரைக்கப்பட வேண்டும்";

(4) **துணைவிதி (7) க்குப்** பதிலாக, பின்வரும் துணைவிதி மாற்றி அமைத்துக்கொள்ளப்பட வேண்டும், அதாவது:—

'' (7) மாவட்ட ஆட்சியர், ஏல—ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகள் நிறைவுபெற்ற பின்னர், பெறப்பட்ட அனைத்து விண்ணப்பங்களையும் புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநரின் வாயிலாக மாநில அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும். அறிவிக்கப்பட்ட ஒவ்வொரு பகுதிக்கும், ஒப்பந்தத்தில் பெறப்பட்ட விண்ணப்பங்களையும், சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர் அல்லது ஏலதாரரால் அளிக்கப்பட்ட தொகையுடன் ஏலத்தில் அளிக்கப்பட்ட ஏல விவரங்களையும் தனியாகக் குறிப்பிட்டு பட்டியல் வடிவிலான அறிக்கை ஒன்றைத் தயாரித்து, ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகளுக்குத் தொடர்புடைய ஆவணங்களுடன் கூடிய அசல் விண்ணப்பங்கள் மற்றும் மேற்சொன்ன நடைமுறையின்மூலம் பெறப்பட்ட உயரளவு ஏலத்தொகை அல்லது ஒப்பந்தத் தொகைக்கான நியாயமான காரணம் குறித்த பரிந்துரைகளுடன் கனிமங்களை வெட்டி எடுப்பதற்காக விதிக்கப்பட வேண்டிய நிபந்தனைகளைக் குறிப்பிட்டு மற்றும் ஒவ்வொரு நேர்விற்குமான சூழல்கள் கோருவதற்கேற்ப, இவ்விதிகளின் இணைப்பு—I இல் உள்ள படிவம் அல்லது அதற்கு அருகிலுள்ள படிவத்தில் வரைவுக் குத்தகை ஒப்பாவணத்தின் நகல் ஒன்று மற்றும் குத்தகையில் அளிக்கப்பட உத்தேசிக்கப்பட்டிருக்கும், அளவிடப்பட்ட மற்றும் எல்லை வரையறுக்கப்பட்ட பகுதியையுடைய வரைபடத்தின் சான்றளிக்கப்பட்ட நகல் ஒன்றுடன் அவற்றை ஒரு வாரத்திற்குள் அனுப்பி வைக்க வேண்டும். மாவட்ட ஆட்சியரிடமிருந்து கருத்துரு வரப்பெற்றவுடன், புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர், அவரின் பரிந்துரைகளுடன் மாநில அரசுக்கு அதனை அனுப்பிவைக்க வேண்டும்.''

(5) **துணைவிதி (8) இல்,—**

(a) பகுதி (a) இல்,—

(i) உட்பகுதி (ii) க்குப் பதிலாக பின்வரும் உட்பகுதி மாற்றி அமைத்துக்கொள்ளப்பட வேண்டும், அதாவது:—

''(ii) மாநில அரசின் ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீதத் தொகையைத் தொடர்புடைய மாவட்டக் கருவூலத்தில் செலுத்தி, இக்கடிதம் கிடைக்கப்பெறும் நாளிலிருந்து ஒரு மாதக் கால அளவிற்குள் அசல் செலுத்துச் சீட்டை மாநில அரசிற்கு அனுப்ப வேண்டும் மற்றும் 1999 ஆம் ஆண்டு கிரானைட் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி விதிகளின் 12 ஆம் விதியின் படி ஒப்புதலளிக்கப்பட்ட சுரங்க வரைபடத்தை, மாநில அரசிடமிருந்து இக்கடிதம் கிடைக்கப்பெறும் நாளிலிருந்து மூன்று மாத கால அளவிற்குள் மாநில அரசிற்கு அனுப்ப வேண்டும் என்னும் உத்தரவுடன் மாநில அரசு, குறிப்பிட்ட பரப்பளவிற்கான குத்தகையை வழங்குவதற்கான அதன் முடிவை அனுப்ப வேண்டும்.'';

(ii) உட்பகுதி (iii) விட்டுவிடப்பட வேண்டும்;

(iii) உட்பகுதி (iv) இல், "உட்பகுதிகள் (ii) மற்றும் (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக "உட்பகுதி (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு" என்னும் சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(b) பகுதி (b) க்குப் பதிலாகப் பின்வரும் பகுதி அமைத்துக்கொள்ளப்பட வேண்டும், அதாவது:—

''(b) விண்ணப்பதாரரால் அளிக்கப்படும் உயரளவுத் தொகையானது, நேர்வின் சூழலுக்குத் தக்க அளவில் இல்லையென்றும் மேற்சொன்ன விண்ணப்பதாரருக்கு அந்தக் குத்தகையை வழங்குவது கனிம வளர்ச்சிக்குப் பொருந்தாது என்றும் மாநில அரசு கருதும் நேர்வில், மேற்சொன்ன விண்ணப்பதாரருக்குக் குத்தகை வழங்க மறுக்கும் ஆணை ஒன்றை அதற்குரிய காரணங்களைக் குறிப்பிட்டு, மாநில அரசு, விண்ணப்பதாரருக்குத் தகவல் அனுப்ப வேண்டும்.'';

(6) **துணைவிதி (9) இல்,—**

(a) பகுதி (b) இல், ‘‘அல்லது ரூ.20,000 (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) அதில் எது அதிகமோ அது’’ என்னும் சொற்றொடர் விட்டுவிடப்பட வேண்டும்;

(b) பகுதி (g) க்குப் பதிலாகப் பின்வரும் பகுதி அமைத்துக்கொள்ளப்பட வேண்டும், அதாவது:—

‘‘(g) குத்தைதாரர், சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அல்லது அது தொடர்பாக அவரால் அதிகாரமளிக்கப்பட்ட யாதொரு அலுவலரிடமிருந்து போக்குவரத்து அனுமதியைப் பெற்ற பின்னர், இவ்விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ள ஏனைய நிபந்தைகளுக்கிணங்க, குத்தகை நிலப்பரப்பிலிருந்து கனிமத்தை எடுக்கவும் கொண்டு செல்லவும் வேண்டும்.’’

(c) பகுதி (h) க்குப் பதிலாகப் பின்வரும் பகுதி அமைத்துக்கொள்ளப்பட வேண்டும், அதாவது:—

‘‘(h) குத்தகைதாரர், வெட்டி எடுக்கப்பட்ட அனைத்து கனிமங்களின் அளவு மற்றும் கற்சுரங்கம் அமைந்துள்ள இடத்திலிருந்து அவை எடுத்துச் செல்லப்பட்டது, தொடர்பான ஏனைய விவரங்களைத் தெரிவிக்கின்ற சரியான கணக்குகளைப் பராமரிக்க வேண்டும். மாநில அரசு அல்லது புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் அல்லது மாவட்ட ஆட்சியரால் இது தொடர்பாக அதிகாரமளிக்கப்பட்ட யாதொரு அலுவலரையும், சுரங்கத்தை ஆய்வு செய்யவும், அவருடைய ஆவணங்கள் மற்றும் கணக்குகளைச் சரிபார்க்கவும், அவரால் கோரப்படும் அத்தகைய விவரங்கள் மற்றும் அறிக்கைகளை வழங்கவும் குத்தகைதாரர் அனுமதிக்க வேண்டும்.’’

**என். முருகானந்தம்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.